https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கலிங்கமும் பெண்களும்

**திருமதி மு. ஜெயராணி**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் - 21

**ஆய்வுச்சுருக்கம்**

*சிற்றிலக்கியங்களில் ஒன்றான கலிங்கத்துப்பரணியில் இடம்பெறும் மகளிர் பற்றிய செய்திகள் இடம் பெறும் பாடல்களை ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வில் மற்ற இலக்கியங்களில் இடம்பெறும் மகளிர் பற்றிய செய்திகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.*

## Abstract

The purpose of this article is to analyze the songs related to women found in Kalingathupparani, one of the Prabandha Literary works. In this study, references to women in other literary works are also presented as examples.

*திறவுச்சொற்கள்: பரணி இலக்கியம், மகளிர், போர்க்களம்*

## முன்னுரை

*மகளிர் சிலர் “தங்கள் கணவருடன் தாங்களும் சேர்ந்து உயிர்விடுவதன் முன், போர்க்களத்தில் வீரச்சாவு பெற்றுக் கிடக்கும் தங்கள் கணவரின் முகங்களை ஒரு முறையேனும் காண வேண்டும்” என்னும் பெருவேட்கையால் களம் புகுந்தனர். தெய்வப் பெண்கள் எல்லாரும் காளிதேவியின் திருவடிகளை வணங்கி நிற்கின்றனர். இவ்வளவு பெருமையுடைய காளிதேவியை விட்டுப் பிரியாமல் பேய்கள் சூழ்ந்துள்ளன. கலிங்கத்துப்பரணியில் சிறப்பிக்கப்படும் மகளிர்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

## கணவனை இழந்த பெண்கள்

*“தம் கணவருடன் தாமும் போக என்றே
சாதகரைக் கேட்பாரே, தடவிப் பார்ப்பார்
என் கணவர் கிடந்த இடம் எங்கே! என்று என்று
இடாகினியைக் கேட்போரைக் காண்மின், காண்மின்” (கலிங்கம்.482)*

*மகளிர் சிலர் போர்க்களத்தில் எம் கணவர் எந்த இடத்தில் கிடக்கின்றனர்? என்று காளியின் மெய்க்காப்பாளர்களாகிய சாதனரைக் கேட்டனர். அவர் ஒன்றும் பதில் சொல்லாமையால் தங்கள் கைகளால் களம் முழுமையும் தடவிப்பார்த்தார்கள். அப்பொழுதும் காணமுடியவில்லை. சுடலைக்கு எடுத்துப் போயிருப்பார்களோ என்ற எண்ணம் உதித்தது. உடனே அங்குச் சென்றார்கள். அங்கே பிணங்களைத் தின்னும் பேயாகிய “இடாகினி”ப் பேய் இருந்தது. அதனிடம் “எம் கணவர் எங்கே கிடக்கிறார்? என்று கேட்டுப் பார்க்கிறார்கள்.*

## தலை பெற்ற மனைவி செயல்

*“பொரு தடக்கை வாள் எங்கே? மணிமார்பு எங்கே?
போர்முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பரு வயிரத் தோள் எங்கே, எங்கே? என்று
பயிரவளைக் கேட்பாளைக் காண்மின், காண்மின்! (கலிங்கம்-485)*

*போர்க்களத்தில் வீரச்சாவுற்றுக் கிடக்கிறான் வீரன் ஒருவன். களத்தில் அவனைத் தேடி வந்த அவன் மனைவிக்கு அவனது தலை மட்டுமே கிடைத்தது. ஏனைய உறுப்புகளைக் காணவில்லை. நாயோ நரியோ இழுத்துச் சென்றிருக்க வேண்டும். களத்தில் கணவனுடைய போர்புரிந்த பெரிய கைகள் எங்கே? அக்கையில் பிடித்திருந்த வீரவாள் எங்கே? அழகிய மார்பு எங்கே? போரில் எத்தகைய வீரர்கள் எதிர்த்து வந்தாலும் புறமுதுகு காட்டி ஓடாத பெரிய வல்லமை பொருந்திய தோள்கள் எங்கே? எங்கே? என்று கேட்கிறாள். இவ்வாறாக கணவனை இழந்த பெண்களின் மனநிலையை செயங்கொன்டார் கண் முன் கொண்டு வருகின்றனர்*

*காளி*

*"எவ் அணங்கும் அடி வணங்க*

*இப்பெருமை படைத்துடைய*

*அவ் வணங்கை அகலாத*

*அலைகளை இனிப்பகர்வாம்"* *(கலிங்கம்-135)*

*தெய்வப் பெண்கள் எல்லாரும் காளிதேவியின் திருவடிகளை வணங்கி நிற்கின்றனர். இவ்வளவு பெருமையுடைய காளிதேவியை விட்டுப்பிரியாமல் பேய்கள் சூழ்ந்துள்ளன. காளி எவரையும் வணங்காதவள். ஆனால் அவள் திருவடிகளை எல்லாத் தெய்வ மகளிரும் வணங்குகின்ற பெருமையினை உடையவள்*

*காளியைப் பிரியாத பேய்கள்*

*துஞ்சலுக்கு அணிந்தாம் என முன்னமே*

*சொன்ன சொன்ன துறைதொறும், பேய் எலாம்*

*அஞ்சலித்து, ஒருகால் அகலாமல் அவ்*

*அணங்கினுக்கு அருகாக இருக்கவே*
*(கலிங்கம்-145)*

*பேய்களுக்கு எங்குமே உணவு கிடைக்க வில்லை அதனால் உயிர் விடுவதற்கு உரியகாலம் நெருங்கிவிட்டது என்று சொல்லிக்கொண்டு, கை கூப்பி வணங்கிய வாறு காளிதேவியை விட்டுச் சிறிதும் நீங்காமல், அவள் பக்கத்திலேயே நின்றிருந்தன.*

*காளி வியத்தல்*

*"எழுதி மற்று அது உரைசெய்பவர்கள் செய்பிழை எல்லாம்*

*எமர்பொறுக்க! என இப்படி முடித்த இதனைத்*

*தொழுது கற்றனம் எனத் தொழுது சொல்லும் அளவில்*

*சோழ வம்சம் இது சொன்ன அறிவு என்ன அழகோ!* *(கலிங்கம்-210)*

*முன்பே கண்டோம் காளிதேவியின் சீற்றத்திற்கு அஞ்சி இமயமலைச் சாரலில் சென்று மறைந்து வாழ்ந்த முதுபேய் ஒன்று அங்கிருந்த உருத்திர யோகினியை வணங்கியது. சோழர் வரலாற்றை நாரதர் கூற இமயமலையில் எழுதிய கரிகாலன் இராச பாரம்பரியத்தைப் பின்பு அவர்கள் செய்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்வார்களாக! என்று முடித்திருந்தான். அந்த வரலாற்றை உருத்திர யோகினி தமிழ்நாட்டு முதுபேய்க்குக் கூறினாள். முதுபேய் தான் செய்த பிழையையும் சோழ மரபினர் பொறுப்பார்கள், என்று எண்ணி அவர்கள் வரலாற்றைக் கற்று வந்து காளிதேவியை வணங்கி உரைத்தது. சோழர் வரலாற்றைச் சொன்ன முதுபேயின் முதறிவுத் திறனைக் காளி வியந்தாள்*

*காளி மகிழ்தல்*

*வையகமாம் குலமடந்தை அபயன்*

*தன்னுடைய மரபு கேட்டே*

*ஐயனை யான் பெற்று எடுத்த அப்பொழுதும்*

*இப்போழ்து ஒத்து இருந்தது இல்லை*
*(கலிங்கம்-211)*

*நிலமாகிய உயர்குலப் பெண்ணுக்குத் தலைமகனாக முதற்குலோத்துங்க சோழன் தோன்றினான். அவன் பிறந்த சோழர்குலப் புகழையும், நீதியையும் கேட்டு அவள் களிப்படைந்தாள். இவ்வளவு சிறப்புடைய குலத்தில் தோன்றிய முதற்குலோத்துங்க சோழனைத் தனது அருமை மகனாகவே கருதினாள். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் பெற்ற காலத்திலும் பெருமகிழ்ச்சி அடைவது போல, முதற்குலோத்துங்க சோழனை மகளாகப் பெற்றெடுத்த காலத்திற் கூட இப்பொழுது அடையும் இன்பத்தைப் போல இருந்தது இல்லை என்று கூறி அவள் பெரிதும் மகிழ்ந்தாள்.*

*காளி புகழ்தல்*

*"உலகை எலாம் கவிக்கின்ற கவிகைச்*

*சயதுங்கன் மரபின் கீர்த்தி*

*அலகை எலாம் காக்கின்ற அம்மை, பூ*

*தலம் காப்பான் அவனே! அன்ன"*

*(கலிங்கம்-212)*

*உலகங்கள் எல்லாவற்றையும் ஒப்பற்ற குடைக்குள் போர்த்தியிருக்கின்ற முதற் குலோத்துங்கனுடைய பரம்பரையோர் புகழைக் கேட்ட பேய்களை எல்லாம் காப்பாற்றுகின்ற காளி குலோத்துங்கனே உலகங்களைக் காப்பாற்றுவான் என்று கூறிப் புகழ்ந்தாள்.*

*காளி போர்நிலை கேட்டல்*

*"ஆடிவரு பேய்களின் அலந்தலை தவிர்த்து,*

*அடு பறந்தலை அறிந்து பின்னர் அதனின்*

நின்று

ஓடுவரு பேயை "இகல் உள்ளபடி சொல்க!

என உணர்ந்தனள், உரைத்தருளவே

(கலிங்கம்-312)

காளி தேவியானவள் கூத்தாடிய பேய்களின் களிப்பினால் உண்டான மயக்கத்தைப் போக்கினாள். பகைவரைக் கொல்லும் போர்க்களத்தின் செய்தியை நேரில் கண்டு அங்கிருந்து ஓடிவந்த பேயை அழைத்தாள். போர்க்களத்தில் நடந்ததை நடந்தபடி கூடுதல் குறைதல் இன்றித் தெரிவிப்பாயாக! எனக் கேட்டாள், அதன் பிறகு அப்பேய் அங்கு நடந்ததைக் காளி தேவிக்குக் கூறத் தொடங்கிற்று

### பெண் உருக்கொண்ட பேய்கள்

"ஈண்டும் செருவில் படுவீராட

எறியும் பாராவளை அடுக்கி

வேண்டும் அளவு வாய் நெகிழ்த்து

விடு கம்பிகாளப்புனையீரே! (கலிங்கம்-512)

யானைகள் இறந்த போர்க்களத்தில் இறந்து பட்ட வீரர்கள் ஒருவர் மேல் ஒருவர் வீசி எறிந்த பெரிய வளைதடிகளை ஒன்று சேர்த்து அவரவர்கட்கு வேண்டிய அளவில் வாயை அகற்றிக், காதணிகளாகப் புனைந்து கொள்ளுங்கள்!

### காப்பணியும் காதணியும்

"பணைத்த பனைவெம் கரிக்கரத்தால்,

பரிய கரு நாண் கட்டீரே!

இணைத்த முரசம் வாம் காம்மட்டு

இரட்டை வாளி ஏற்றீரே" (கலிங்கம்-513)

பருத்த கொடிய யானைகளின் பனைமரம் போன்ற துதிக்கைகளை மிகக்கரிய காப்புக் கயிறாகக் கட்டிக்கொள்ளுங்கள். இரட்டை முரசங்களை எடுத்து நடுவே வாளின் பிடியைச் செருகி, இரட்டை வாளி என்னும் காதணியாக அணிந்து கொள்ளுங்கள்!

### தோளணியும் முத்துமாலையும்

"பட்ட புரவிக்கவி குரத்தால்,

பாகு வலயம் சாத்தீரே!

இட்ட கரி சங்கு எடுத்துக் கோத்து

ஒகா வலியும் சாத்தீரே" (கலிங்கம்-514)

இறந்துபோன குதிரைகளின் கவிந்த குளம்பு களைத் தோள் வளையாக அணிந்து கொள்ளுங்கள். இறந்துபோன வீரர்களால் வீசி விடப்பட்ட சுழிசுழியாக வளைந்துள்ள சங்குகளை எடுத்துக் கோர்த்து ஒற்றைச்சர முத்து மாலைகளாக அணிந்து கொள்ளுங்கள்.

### மகளிரும் மன்னரும் சூழ வருதல்

"மடியின்மேல் வருமடிக்குலம் அநேகம் எனவே,

பொய்வளைக் கை மடமாதர்பிடிமீது வரவே

முடியின் மேல் முடி நிரைத்து வருகின்ற எனவே,

முறைசெய் மன்னர்கள் பொற்கொடை கவித்து வரவே" (கலிங்கம்-288)

முதற் குலோத்துங்க சோழன் தன் மனைவியர் ஏழிசை வல்லபி, தியாகவல்லி ஆகியவருடன் வந்த பொழுது, இளவரசியரும் அரசர்களும் சூழ வந்தனர். இளம் பெண்கள் யானை மீது ஏறி வந்தனர். மன்னவர்கள் அழகிய குடைகளைக் கவித்துக்கொண்டு வந்தனர். இக்காட்சி, பெண் யானைகளின் கூட்டங்கள் போலவும், நீதி செலுத்தும் மகுடம் தரித்து வருவது போலவும் இருந்தது.

### மகளிர் கூட்டம்

தொடைகள், சுந்தரம், புடைகொள் கொங்கை, கண்

சோதி வாள்முகம், கோதை ஓது, மென்

நடைகள், மென் சொல் என்று அடைய ஒப்பிலா

நகை மணிக்கொடித்தொகை பரக்கவே

(கலிங்கம்-295)

முதற்குலோத்துங்கன் செல்லும் வழியில் பெண்கள் கூடினர். புன்சிரிப்போடு காணப் பட்ட அந்த பெண்களின் கூட்டம் தொடை, கழுத்து, புடைத்துத் திரண்டு முன் எழுந்து தோன்றும் முலைகள், கண்கள், பேரொளி பொருந்திய முகங்கள், பூச்சூடிய கூந்தல்கள், கண்களுக்கு இனிய நடைகள், செவிக்கினிய சொற்கள் என்று சொல்லப்பட்ட இவை எல்லாவற்றிலும் தமக்குத்தாமே ஒப்பு என்று சொல்லும்படியாக விளங்குகின்றன.

### முடிவுரை

- போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர்களின் குருதியினைக் குடித்து மகிழ வரும் பெண் பேய்கள் தங்களை அலங்கரிக்கும் விதம் பற்றி இக்கட்டுரையில் அறிய முடிகிறது.
- பேய் மகளிரின் தலைவியான காளியின் திரு உருவ அழகினையும், வளமையையும் பற்றிக் கூறுகிறது.
- போர்க்களத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி விரிவாக கலிங்கத்து பரணி விளக்குகின்றது.
- போர்க்களத்தில் இறந்துபட்ட தங்களது கணவன்மார்களைக் காணவந்த பெண் களின் நிலையும் இக்கட்டுரையில் உணரமுடிகிறது.

### துணைநூற்பட்டியல்

1. புலியூர்க்கேசிகன் (உரை), கலிங்கத்துப் பரணி, பாரி நிலையம் சென்னை, 2010.
2. கண்ணன் இரா., சிற்றிலக்கிய ஆராய்ச்சி, அப்பர் பதிப்பகம், சென்னை 2002.